**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 87–2022**

| L.W.1 P.W.1 | | |
|---|---|---|
| Name: | சித்ரா | Caste: |
| Husband's Name: | மணிகண்டன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

(எதிரி ஆஜர். எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317–இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது புதுக்கோட்டையில், எனது அம்மா வீட்டு அருகில் குடியிருந்து வீட்டு வேலை செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 15 ஆண்டுகளாகிறது. எனக்கு 13 வயதில் ஒரு பெண் குழந்தையும், 6 வயதில் ஆண் குழந்தையும் உள்ளது. எனது கணவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்ததை, நான் எனது கணவரின் செல்போன் மூலம் தெரிந்து கொண்டு, 26.08.2021 அன்று எனது மாமனார், மாமியாரிடம் தகவல் சொல்லி, அவரை கேட்க சொன்னேன். அதற்கு எனது மாமனார், மாமியார் எனது கணவரிடம் தொலைபேசியில் 27.08.2021 அன்று நான் கூறியதை அவரிடம் தெரிவித்தார்கள்.

அன்றைய தினம், இரவு 11.00 மணியளிவல் எனது கணவர் வேலை முடித்துவிட்டு, வீட்டிற்கு வந்து, என்னை குச்சிக்காரி, தேவடியா என்று தகாத வார்த்தைகளில் திட்டி, கிரைண்டர் குழவியின் இரும்பு கைப்பிடியை கல்லோடு தூக்கியதில், குழவி மட்டும் கீழே விழுந்துவிட இரும்பு கைப்பிடியால் எனது, இடதுபக்கவாட்டு தலையில் அடித்ததில், எனக்கு ரத்தம் வழிந்தது. அதன் பிறகு, எனது முடியை பிடித்து இழுத்து, ரோட்டில் அனைவரும் பார்க்கும்போது என்னை அடித்ததில், எனக்கு மயக்கம் வந்தது. (சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளித்தார்). கண் விழித்து பார்த்தபோது நான் திருத்துறைப்பூண்டி, அரசு மருத்துவமனையில் எனக்கு

தலையில் 10 தையல்கள் போடப்பட்டது. மயக்கம் தெளியும் வரை நான் அந்த மருத்துவமனையில் இருந்தேன். மயக்கம் தெளிந்த பிறகு என்னை மருத்துவர்கள் விசாரித்தபோது, நான் மருத்துவர்களிடம் எனது கணவர் என்னை தாக்கியதாக அவர்களிடம் கூறினேன். ஆனால், என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கும்போது, எனது குடும்ப உறுப்பினர்கள் நான் பைப்படியில் வழுக்கி விழுந்ததாக கூறி மருத்துவமனையில் அனுமதித்தார்கள்.

பின்னர், எனது மாமியார், மாமனார், கணவர் ஆகியோர்கள் என்னை போலிஸ் கேஸ் ஆகிவிடும் என்று வலுக்கட்டயமாக வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டனர். அதன் பிறகும், எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால், எனது அம்மாவிற்கு தகவல் சொன்னேன். எனது கணவர் என்னை நீ இருந்தால், எனக்கு இடைஞ்சலாக இருக்கும், என்னை கொன்று விடுவதாக மிரட்டினார், அதனால் நான் பயந்துகொண்டு எனது பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கு எனது அம்மா புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் **என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலமானது அ.த.சா.ஆ.1—ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 25.05.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial  Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 87–2022**

| L.W.2 P.W.2 | | |
|---|---|---|
| Name: | அஞ்சலை | Caste: |
| Husband's Name: | பாலையன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act  X of 1873 of the day of 25.05.2026
(எதிரி ஆஜர். எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317–இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து பூ வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகளாவார். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை வேளையில், எனது மகள் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு, உடல்நிலை முடியாமல் என்னிடம் பேசினார். நான் என்னவென்று கேட்டபோது, எனது கணவர் என்னை அடித்துவிட்டார் என்று கூறினார். எதனால் அடித்தார் என்று கேட்டேன், அதற்கு எனது மகளின் கணவர் வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பதை தெரிந்து கொண்டு, அதனை கேட்டதற்காக அடித்ததாக எனது மகள் கூறினார். எனது மகள் அங்கிருந்து, வந்துவிடுவதாகவும், அவரது கணவர் கொன்றுவிடுவதாக மிரட்டுவதாகவும் கூறி, பஸ்ஸில் வந்து கொண்டிருப்பதாக கூறினார்.

எனது மகளுக்கு தலையில் பெரிய கட்டு போட்டு, முகம் வீங்கிய நிலையில் வந்ததால், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கு 3 நாட்கள் எனது மகள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 25.05.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**